www.asrc.org.au

Asylum Seeker Resource Centre
ABN 64114965815 • Incorporation No: A0042918
12 Batman Street, West Melbourne
Victoria 3003, Australia
t: 03 9326 6066
f: 03 9326 5199

# வணக்கம்

புகலிடம் கோருவோர் ஆதார மையத்திற்கு உங்களை வரவேற்கிறோம். எங்களது நிறுவனம் ஒரு சுதந்திரமான மனித உரிமைகள் அமைப்பு. நாங்கள் அரசாங்கத்திற்கு வேலை செய்வதில்லை. எங்களது உதவி இலவசமானது. நாங்கள் அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரும் மக்களினது மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் நிலைநிறுத்துவதற்காகவும் வேலை செய்கிறோம். எல்லா மக்களும் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்.

## நாங்கள் எவருக்கு உதவி செய்கிறோம்

நாங்கள் புகலிடம் கோருவோருக்கு உதவி செய்கிறோம். புகலிடம் கோரும் ஒரு நபர்:

- அங்கு இருப்பது மிகவும் அபாயமானது என்பதற்காக அவர்களது நாட்டைவிட்டு வெளியேற வேண்டும்; மற்றும்
- அவர்கள் கடுமையான துன்பத்துக்குள்ளாகி அவர்களது நாட்டில் அபாயத்தில் இருந்தால் அல்லது அவர்களது அரசியல் அபிப்பிராயம், மதம், இனம் மற்றும் நாட்டுரிமை அல்லது சமூக நிலபரம் ஆகிய காரணங்களுக்காக கடுமையான கேடு விளையும் என்றால்; மற்றும்
- அப்படியான கடுமையான துன்பத்திலிருந்து அவர்களது அரசாங்கம் அவர்களை பாதுகாக்க முடியாது அல்லது பாதுகாக்க மாட்டாது என்றால்

## நாங்கள் எப்படி உங்களுக்கு உதவ முடியும்

அவுஸ்திரேலியாவில் நீங்கள் ஒரு அகதி என்று நிரூபிப்பது இலகுவான காரியம் அல்ல. நீங்கள் அகதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா என்பது பற்றி அறிய நாங்கள் உங்களுக்கு நேர்மையான இலவச சட்ட அறிவுரை வழங்குவோம். நீங்கள் அகதியாக கணிக்கப்படும் சாத்தியம் இருக்கிறது என்று நாங்கள் எண்ணினால் நாங்கள் உங்களுக்கு உதவி செய்வோம். ஒருவரும் விரும்பி புகலிடம் கோரமாட்டார்கள் என்பதை நாங்கள் அறிவோம். அதனால் தான் உங்களுக்கு அவசியமான நேரங்களிலும் கடினமான நேரங்களிலும் ஆதரவு தர நாங்கள் இருக்கிறோம்.

நாங்கள் கூடியளவு சிறப்பாக சட்ட அறிவுரை தொடக்கம் மருத்துவக் கவனிப்பு, மருந்துகள், உங்களது குழந்தைக்கு நப்பிகள் (Nappies), நாளாந்தம் சுகாதாரமான பகலுணவு, உணவுப் பொதிகள், பொழுதுபோக்கு, அறிவுரை வழங்கல், நெருக்கடி நிலைமை ஆதரவு, ஆங்கில வகுப்புகள், இட இயல்பு அறிதல், மற்றும் மெல்பணில் குடியமர்வு, மற்றும் ஒரு தொழில் எடுக்க உதவி வரை எல்லாவற்றிற்கும் உதவி வழங்குவோம். நீங்கள் கூறுபவை எல்லாம் இரகசியமாய் வைத்திருக்கப்படும். அத்துடன் நீங்கள் எமது மையத்தில் பாதுகாப்பாக இருப்பீர்கள்.

## எங்களை எப்படிக் கண்டுபிடிக்கலாம்

நீங்கள் மெல்பண் இல் ஒரு புகலிடம் தேடுபவராய் இருந்தால் நீங்கள் நேரடியாக எங்களது மையத்திற்கு வந்து எங்களை திங்கட்கிளமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை காலை 10 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை உதவி கேட்கலாம். எங்களது மையம் 12 பற்மான் தெரு (Batman Street) மெல்பண் மேற்கில் இருக்கிறது. நீங்கள் இந்த நேரங்களில் உதவிக்கு (03) 9326 6066 இலும் அழைக்கவும் முடியும்.




**நீங்கள் புகலிடம் கோருவோர் ஆதார மையத்திற்கு பின்வரும் வழிகளில் வரலாம்:**

எமது மையம் நகரத்தில் பிளாக்ஸ்டாப் கார்டினிற்கு (Flagstaff Garden) குறுக்காக கிங் தெருவும் பற்மான் தெருவும் சந்திக்கும் இடத்தில் இருக்கிறது.

- நீங்கள் பிளாக்ஸ்டாப் அல்லது சதேர்ண் குறஸ் (Southern Cross) ரயில் நிலையங்களில் இருந்து நடந்து வரலாம். ஒரு 5 நிமிடங்கள் நடக்கும் தூரம்.
- நீங்கள் நகரத்தில் சிட்டி சேர்க்கிள் டிராம் வண்டி ஒன்றில் ஏறி லாட்ரொப் தெருவும் (La Trobe Street) கிங் தெருவும் சந்திக்கும் இடத்தில் இறங்கி நடக்கலாம். ஒரு 2 நிமிட நடக்கும் தூரம் மட்டுமே.

**நீங்கள் அவுஸ்திரேலியாவில் மெல்பண் நகரத்தில் இருக்காவிட்டால் என்ன நடக்கும்?**

நாங்கள் மெல்பணில் இருக்கும் புகலிடம் கோருவோருக்கு மட்டும் உதவி செய்ய முடியும். நீங்கள் வேறொரு மாநிலத்தில் இருந்தால் உங்களுக்கு அருகாமையில் இருக்கும் சேவையை அறிய பின்வரும் இணைப்பைச் சுட்டவும்.

http://www.asrc.org.au/media/documents/asrc-resource-directory.pdf

நீங்கள் அவுஸ்திரேலியாவிற்கு வெளியே இருந்தால் பின்வரும் இணைப்பைச் சுட்டி சர்வதேச ரீதியில் எப்படி புகலிடம் கோரி விண்ணப்பிக்க முடியும் என்ற தகவலை பெற முடியும் :

http://www.asylumlaw.org/asylumseeker